**18TAP15**

# PSG COLLEGE OF ARTS & SCIENCE
(AUTONOMOUS)

## MA DEGREE EXAMINATION MAY 2022
(Fourth Semester)

Branch – **TAMIL**

## THONMAI ILAKKIYAM

Time: Three Hours    Maximum: 75 Marks

### பகுதி – அ

**சரியான விடையைத் தேர்வு செய்க** **(10x1=10)**

1. களவனும் கடவனும் புனைவனும் தானே – யார் கூற்று?
   அ)தலைவன்    ஆ) தலைவி
   இ) தோழி    ஈ) கண்டோர்

2. தலைவிக்குக் குறி கூறுபவள் யார்?
   அ) அகவன் மகள்    ஆ) தலைவன்
   இ) இறைவன்    ஈ) தோழி

3. விழவுடை விழுச்சீர் ---------------- பெறினும்
   அ) பழனி    ஆ) திருவேரகம்
   இ) வேங்கடம்    ஈ) குன்று தோறாடல்

4. ஐங்குறுநூற்றில் பாசறைப் பத்து பாடியவர் யார்?
   அ) பேயனார்    ஆ) கபிலர்
   இ) பரணர்    ஈ) நல்லந்துவனார்

5. ஊண்ணுநீர் ஊட்டி வா – யார் கூற்று?
   அ) அன்னை    ஆ) தலைவன்
   இ) தோழி    ஈ) தலைவி

6. திருமால் இனியவனாக ------------- க்கும் இன்னாதவனாக ------------க்கும் இருக்கிறா்.
   அ) நப்பின்னைக்கும் யசோதரைக்கும்    ஆ) பிரகலாதனுக்கும் இரணியனுக்கும்
   இ) இராம இலக்குமனுக்கும்    ஈ) பரத சத்ருக்கனனுக்கும்

7. கேழல் - பொருள் தருக
   அ) பன்றி    ஆ) கரடி
   இ) புலி    ஈ) சிங்கம்

8. பதிற்றுப்பத்தில் எட்டாம் பத்தினைப் பாடியவர்
   அ) பரணர்    ஆ) அரிசில்கிழார்
   இ) கபிலர்    ஈ) குமட்டூர் கண்ணனார்

9. மலைபடுகடாம் எத்தனை அடிகளைக் கொண்டது?
   அ) 583    ஆ) 103
   இ) 261    ஈ) 282

10. கூத்தராற்றுப்படை தலைவனின் மலை
    அ) நவிர மலை    ஆ) கொல்லி மலை
    இ) செல்லிமலை    ஈ) பழனி மலை

### பகுதி –ஆ **(5x7=35)**

**பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.**

11. அ) ஔவையார் பாடிய குறிஞ்சிப் பாடல்களின் உவமை நயத்தை விளக்குக.
    (அல்லது)
    ஆ) மடலேறும் பாங்கினைப் பரணர் பாடல் கொண்டு விளக்குக.

12. அ) கொல்லிப் பாவை குறித்து அகநானூறு கூறுவனவற்றை எடுத்துரைக்க.
    (அல்லது)
    ஆ) முல்லை நிலத்தின் சிறப்பினைப் பாசறைப்பத்து கொண்டு விவரி.

Cont…

13. அ) மோர் விற்கும் பெண்ணின் சிறப்புகளாக நல்லுரத்திரன் கூறுவனவற்றை விளக்குக.

(அல்லது)

ஆ) செவ்வேளின் பண்புநலன்களைப் பரிபாடல் எங்ஙனம் எடுத்துரைக்கின்றது.

14. அ) வறுமை நிலையினைக் காட்டும் சொல்லோவியத்தினைப் பெருஞ்சித்திரனாரின் பாடல் கொண்டு விளக்குக.

(அல்லது)

ஆ) நிறம்படுகுருதி பாடலில் காணும் பெருஞ்சேரல் இரும்பொறையின் பண்புகளைக் கூறுக.

15. அ) மலைபடுகடாமில் குறிப்பிடப்படும் பண்டைக்கால இசைக்கருவிகள் குறித்து விளக்கம் தருக.

(அல்லது)

ஆ) மலைபடுகடாம் குறிப்பிடும் பாணர் பற்றிய செய்திகளை எழுதுக.

**பகுதி – இ** **(3x10=30)**

**பின்வரும் வினாக்களுக்கு எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க**

16. வெள்ளிவீதியார் பாடலில் வெளிப்படும் தலைவியின் மனப்பாங்கினை எடுத்துரைக்க.
17. அகநானூற்றில் பரணர் பாடல்களில் காணும் வரலாற்றுப் பதிவுகளைத் தொகுத்தெழுதுக.
18. திருமாலின் உருவச் சிறப்பினைப் பரிபாடல் கொண்டு விவரி.
19. அரசர்களின் கொடைத் தன்மையினைப் புறநானூற்றின் வழிநின்று விவரிக்க.
20. மலையில் எழும் ஓசைகள் பற்றி மலைபடுகடாம் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

Z-Z-Z END